*கவனிக்க.- 2019.05.24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2126 - 2019 මැයි මස 31 වැනි සිකුරාදා - 2019.05.31

*2126 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 120 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.-** (i) இலங்கை பிளாஸ்ரிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2019, மே மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) ஸ்ரம வாசனா நிதியம் (திருத்தம்) சட்டமூலம் 2019, மே மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2019, யூன் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, யூன் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

119-B81527-353 (2019/05)

# நானாவித அறிவித்தல்கள்

## மேல் மாகாண உயர் நீதிமன்றத்தில்

(வாணிப நியாயாதிக்கத்தை செயற்படுத்தும்) (கொழும்பில் நடாத்தப்படும்)

வழக்கு இலக்கம்: எச்சீ/சிவில்/17/19/சீஓ
வகை : முடிவுறுத்தல்
நடைமுறை : சாராம்சம்
பெறுமதி : ரூபா 191,970,690.20

வரையறுக்கப்பட்ட மவுண்ட் பேக் பிரைவேட் லிமிட்டெட் இல. 32, நரம்போல றோட், கட்டுலண்ட, தேகடன, விடயத்தில் பங்குனி, ஆவணி

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பகுதியின் கீழ் நீதிமன்றத்தினால் முடிவுறுத்தப்படுவதற்கான விண்ணப்பமொன்றின் விடயத்தில்

ராஜகிரிய ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்த, இல. 100/1 இல் தனது பதியப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதும் ராஜகிரிய, நாவல வீதி, இல. 504 இல் தனது பிரதான வியாபார ஸ்தானத்தைக் கொண்டுள்ளதுமான வரையறுக்கப்பட்ட எல்ஓஎல்சீ பெக்டர்ஸ் ஸ்தாபனம்

விண்ணப்பதாரர்

கொழும்பு வாணிப உயர் நீதிமன்றத்தினால் மேற்படி கம்பனியை முடிவுறுத்துவதற்காக ராஜகிரிய, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்த, இல. 100/1 இல் தனது பதியப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதும் ராஜகிரிய, நாவல வீதி, இல. 504 இல் தனது பிரதான வியாபார ஸ்தானத்தைக் கொண்டுள்ளதுமான வரையறுக்கப்பட்ட எல்ஓஎல்சீ பெக்டர்ஸ் ஸ்தாபனத்தினால் 2019, பங்குனி 29 ஆந் திகதி விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி விண்ணப்பம் 2019, ஆவணி 09 ஆந் திகதி நீதிமன்றத்தினால் விசாரணை செய்யப்படுவதற்கு பணிக்கப்பட்டுள்ளது. மேற்படி விண்ணப்பத்தின் மீது தீர்ப்பு வழங்கப்படுவதை ஆதரிக்கும் அல்லது எதிர்க்கும் மேற்படி கம்பனியின் ஏதும் கடன்வழங்கிகள் அல்லது பங்களிப்பாளர் அந்நோக்கத்திற்காக விசாரணை செய்யப்படும் நேரத்தில் நேரடியாகவோ அல்லது அவரின் ஆலோசனை சட்டவாதியின் மூலமாகவோ ஆஜராகலாம். அதற்குரிய கட்டணத்தை செலுத்துவதன் மூலம் முறைப்பாட்டின் பிரதியை பெற்றுக்கொள்ள நாடும் மேற்படி கம்பனியின் ஏதும் கடன்வழங்கிகள் அல்லது பங்களிப்பாளருக்கு கீழ் கையொப்பமிடுபவரினால் பிரதியொன்று வழங்கப்படும்.

கையொப்பம் :
சி. எம். ஜெயராட்ன,
இல. 22,
ஷெடி குரூவ் எவனியூ,
கொழும்பு - 08.

**குறிப்பு**.- மேற்படி விண்ணப்பத்தின் மீதான விசாரணையின் போது ஆஜராகியிருக்க நாடும் எந்நபரும் அவ்வாறு செய்வதற்கான தனது விருப்பதின் எழுத்து மூலமான அறிவித்தலை மேல் பெயர் குறிப்பிடப்பட்ட ஸ்ரீமாள் பொன்னம்பெருமவுக்கு சமர்ப்பிக்கவோ அல்லது கடித மூலமோ அனுப்பி வைக்க வேண்டும். அறிவித்தலில் அந்நபரின் பெயரும் விலாசமும், ஸ்தாபனமொன்றாயின் அதன் பெயரும் விலாசமும் குறிப்பிடப்பட வேண்டியதோடு அந்நபரினால் அல்லது ஸ்தாபனத்தினால் அல்லது அவரின் அல்லது ஸ்தாபனத்தின் (இருப்பின்) சட்டவாதியினால் கையொப்பமிடப்பட்டு மேல் பெயர் குறிப்பிடப்பட்டவருக்கு 2019, ஆவணி 08 ஆந் திகதி பின்னேரம் 6 மணிக்கு பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக சமரப்பிக்கவோ அல்லது கடித மூலமோ அனுப்பி வைக்க வேண்டும்.

சி. எம். ஜெயராட்ன,
இல. 22,
ஷெடி குரூவ் எவனியூ,
கொழும்பு - 08.

05-847

## மேல் மாகாண நீதிமன்றத்தில்

*தனது குடியியல் நீதிமன்ற நியாயாதிக்கத்தை அமுல்படுத்தும்போது கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண நீதிமன்றத்தில் ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல்*

வழக்கு இலக்கம்: எச்சீ(சிவில்) 21/ 2019/சீஓ
தன்மை : கம்பனி
நடைமுறை : சுருக்கம்

கொழும்பு 03, புனித மைக்கல் வீதி, இல. 18 இல் தமது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை நடாத்தி வரும் மட்டுப்படுத்தப்பட்ட வோல்கர்ஸ் பய்லிங் (தனியார்) லிமிட்டெட் Walkers Piling (PVT) LTD சம்பந்தமான காரணத்தினால்

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் XII ஆம் பகுதியின் 270 (உ) மற்றும் 270 (ஊ) பிரிவுகளின் கீழ் உள்ள நீதிமன்ற நியாயாதிக்கத்தின் படி கம்பனியை ஒடுக்குதல் தொடர்பான மனு

டோக்கியோ சுப்பர்மிக்ஸ் (தனியார்) லிமிட்டெட் இல. 469 1/1 காலி வீதி, கொழும்பு - 03.

மனுதாரர்

குடியியல் நீதிமன்ற நியாயாதிக்கத்தை அமுல்படுத்தல் தொடர்பாக கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண நீதி மன்றத்தினால் மேற்குறித்த கம்பனியான வோல்கர்ஸ் பய்லிங் (தனியார்) லிமிட்டெட் WALKERS PILING (PVT) LTD (PV 5815) இனை ஒடுக்குவதற்காக மனுதாரரால் 05 ஏப்பிறல் 2019 அன்று மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. குறித்த மனுவானது 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியன்று முன் விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ளது. மேலும் அம்மனு தொடர்பில் கட்டளையொன்றை செய்வதற்காக உதவுவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு விரும்பும் அக்கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுத்தொகை செலுத்துநர் அந்நோக்கத்திற்காக விசாரணையின்போது தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோன்ற முடியும் எனவும் மனுவின் பிரதியொன்றை தேவைபடுத்துகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களை செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கையொப்பம் :
மாலா செல்வரட்ணம்,
சட்டத்தரணி,
இல. 41, பெல்மன்ட் வீதி,
கொழும்பு - 12.

**குறிப்பு**.- அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின்போது தோன்றுவதற்கு எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்கான எண்ணத்தினை மேலே பெயர் குறிப்பிட்ட மாலா செல்வரட்ணம் சட்டத்தரணிக்கு எழுத்து மூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். அறிவிக்கும் ஆளின் பெயர் மற்றும் முகவரியும் கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டும் என்பதுடன் ஆள் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின்) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன் 2019, யூன் மாதம் 28ஆந் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும் அல்லது குறிப்பிட்ட சட்டத்தரணிக்கு மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு போதுமான கால அளவிற்குள் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

மனுதாரரின் சட்டத்தரணி.

05-893

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.